# SAJONI
## Newsletter
**February 1 to 15, 2026**






**SATCHIDANANDA JOTHI NIKETHAN INTERNATIONAL SCHOOL**

(Affiliated to CBSE - New Delhi)
KALLAR,
METTUPALAYAM,
COIMBATORE(DT)-641305,
TAMIL NADU.

www.sjnschool.com



**Volume 5 Issue 17** **February 16, 2026**

'Pray sincerely and trust in a Higher Power '
-Swami Satchidananda Maharaj

Inside this issue:


Parent Talk 2
National Youth Day Celebration 3
Parent Talk 4
Farewell Sppech by Head Girl P.Diya Preethi 5
Satchidananda bids Farewell to outgoing class XII 6
மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நிறைவு விழா விருது வழங்கும் விழா 8
நன்றி நவிலல் விழா 9
Fabric Painting Workshop 14
வானம் தொடலாம் வாங்க நூல் வழங்கும் 14
Accolades 17
குறளோசை 22


## THE HIGHEST REALIZATION IS THAT

Everything is happening according to God's Will. God is behind everything. We are all puppets. God pulls a string, I raise my hand this way; another string, I raise my hand another way. God drops the string, my arm drops.

So, we are all puppets. If we realize that, why should we worry about the role we are playing? If God wants you to play that part, play it. No part is big or small. Only by knowing this truth can you become great. It is immaterial where you are, what you are doing.

The great saint Thayumanavar said, "Don't worry about which is better, monastic life or householder life. Both are equally good if only you know one secret. What is that secret? We are all tops. There is one Player. God simply winds the string around and pulls it, and then we spin. Depending on how tightly the rope is wound and how fast God plays, you rotate for a while and then you fall down."

It's not how you present yourself, what you call yourself, what you do for a job that's important. The most important thing is: Do you know that you are nothing but a top and that at any moment your swinging could stop? The highest realization is that, know that every minute that great Presence is in you, functioning through you and you are nothing but an instrument.

*-Swami Satchidananda Maharaj*

**We Educate the Mind; Illuminate the Soul**

# Parent Talk

February 2, 2026

## "Aspirations and Expectations"

Our school was privileged to host Shri G. Prakash, Proprietor of Sivasakthi Fibers, Tirupur, who addressed the students during the morning assembly on February 2, 2026, on the thought-provoking topic "Aspirations and Expectations."

In his inspiring address, he highlighted how the field of education has undergone tremendous transformation compared to his own school days. Earlier, the focus was primarily on acquiring knowledge. However, in today's competitive and dynamic world, knowledge alone is not sufficient. He emphasized that skills and attitude play an equally important role in shaping a successful individual.

Speaking about the importance of attitude, he shared a remarkable real-life incident involving Spanish athlete Iván Fernández Anaya and Kenyan runner Abel Mutai during a cross-country race held in London in 2012. When Abel Mutai mistakenly stopped just before the finishing line, thinking he had completed the race, Iván Fernández Anaya, who was right behind him, chose not to overtake and win unfairly. Instead, he guided Mutai to the finish line, allowing him to claim his rightful victory. Through this example, Shri G. Prakash reminded students that a good attitude and strong moral values are always worth more than temporary success.

He also narrated an incident from the life of renowned writer Vaikom Muhammad Basheer. Once, when Basheer lost his wallet and faced humiliation at a restaurant for being unable to pay his bill, a mysterious and rough-looking stranger stepped forward, paid the bill, and returned his wallet. This unexpected act of kindness restored his faith in humanity. The story beautifully conveyed that compassion and integrity still exist in the world.

Concluding his address, Shri G. Prakash stressed that while aspirations drive us forward and expectations motivate us to achieve, it is values, character, and the right attitude that truly define a person. His words left a lasting impact on the students, encouraging them to aim high while staying grounded in strong moral principles.



# NATIONAL YOUTH DAY CELEBRATION

**February 2, 2026**

The National Youth Day celebration was organized with great enthusiasm by the Swami Vivekananda Study Circle on February 2, 2026, in the school auditorium. The programme aimed at inspiring students with the life and teachings of Swami Vivekananda, whose ideals continue to guide the youth of the nation.

The programme commenced with a soulful prayer song by the school choir, creating a serene atmosphere. The members of the Swami Vivekananda Study Circle delivered speeches on Swami Vivekananda's life and his powerful messages to the youth.

A meaningful skit portraying the transformation from weakness to strength was presented, highlighting the importance of confidence, determination, and character building. Devotional songs and inspiring presentations added spiritual fervour to the celebration. The historic Chicago Address of Swami Vivekananda was also recited, reminding everyone of his timeless message of universal brotherhood and harmony.

During the felicitation, the Principal, Dr. R. Uma Maheswari, and the Vice Principal, Dr. S. Sakthivel, encouraged the students to follow the noble principles of Swami Vivekananda and strive towards excellence with discipline and dedication.

In his Presidential Address, Dr. Kavidasan, Secretary, emphasized Swami Vivekananda's concept of the "3H Formula" – Head to Think, Hand to Help, and Heart to Feel." He motivated the youth to develop intellectual clarity, practice selfless service, and cultivate compassion in order to build a strong and value-based society.

The programme concluded with a formal Vote of Thanks, expressing gratitude to the dignitaries, management, teachers, participants, and audience for making the celebration a grand success. The entire programme was meticulously organized by Mr. N. K. Sekaran and Mrs. B. Sunitha teachers of English whose dedicated efforts ensured the smooth conduct of the event. The celebration truly reflected the spirit of National Youth Day and rekindled the message of Swami Vivekananda - "Arise, Awake and stop not till the goal is reached."






# Parent Talk

February 9, 2026

## Aspirate Today, Achieve Tomorrow

Shri. Thirumoorthy Anbazhgan, Cyber Security Sales Specialist, Gulf Business Machine, Qatar, addressed the students during the morning assembly on February 9, 2026 on the inspiring topic "Aspirations and Expectations."

He began his talk with a powerful quote: "Luck happens when your preparation meets opportunity."

He explained that success is not accidental; it is the result of consistent preparation, discipline, and the courage to act when opportunities arise.

To illustrate this, he shared the inspiring story of 13-year-old Austin Appelbee, who became a real-life hero in February 2026 in Western Australia. When their kayaks were swept out to sea, Austin courageously swam nearly 4 kilometres in rough waters for four hours to reach the shore. He then ran 2 kilometres to seek emergency assistance, ultimately saving his mother and siblings. The speaker connected this story to the theme of preparedness — Austin's courage and physical readiness turned a crisis into a heroic act.

Moving to the modern context, he emphasized that the future digital world will be driven by Artificial Intelligence, Quantum Computing, and Cyber Security. He encouraged students to equip themselves with digital knowledge and skills to meet future expectations.

He cautioned that the internet is like fire — it can cook your food or burn your house. While technology offers immense opportunities, careless use can lead to serious consequences. Students were advised to be mindful and responsible while posting content on social media and other digital platforms.

The session was both motivating and informative. It inspired students to nurture big aspirations while preparing themselves with the right knowledge, discipline, and digital responsibility to meet the challenges of the future.







## Head Girl P. Diya Preethi's Farewell Address February 10, 2026




The Farewell Ceremony held on 2nd February 2026 was filled with gratitude and emotion as Head Girl P. Diya Preethi of Class XII–Management Stream, delivered a touching address on behalf of the outgoing batch of 2025–26.

Reflecting on her nine-year journey in the school, Diya described it as "a beautiful chapter" that shaped her life. She expressed heartfelt thanks to her parents for enrolling her in what she called a "heaven on earth," and gratefully acknowledged the blessings of Swami Sachidananda Maharaj, whose vision of selflessness and service guides the institution's motto, "Live and learn to love and serve."

She extended sincere appreciation to the school leadership—Chairman K. Ramasamy, Secretary Dr. Kavidasan, Principal Dr. Uma Maheswari, Vice Principal Dr. Saktivel, Academic Dean Dr. Sheela Grace, for their guidance and unwavering support.

With warmth, she thanked her teachers, coaches, dorm mentors, and non-teaching staff for nurturing students beyond academics and shaping them into confident individuals. She fondly recalled her experiences in sports, MUN conferences, cultural activities, and hostel life, which created lifelong memories.

Addressing her batchmates, she acknowledged the bond shared by the 91 students of 2025–26 and encouraged juniors to cherish every opportunity, dream big, and uphold the school's values.

She concluded by affirming that this was not a goodbye, but a promise to carry the school's name and ideals with pride. Her final words, "Be the light," left the audience inspired and emotional.

## Satchidananda bids Farewell to outgoing class XII February 10, 2026

The Grade XII Farewell Ceremony of Satchidananda Jothi Nikethan International School was held on February 10, 2026. The atmosphere was a beautiful blend of celebration and nostalgia as the outgoing students prepared to bid goodbye to the corridors that had shaped their dreams.

The programme commenced with a solemn prayer, seeking divine blessings for the bright future of the students. The Welcome Address by K.V.Annanya of class XI, warmly greeted the gathering and reflected on the remarkable journey of the Grade XII batch.

Teachers, Mr.P.Murugesan, teacher of Geography, Mrs.G. Shanmuga Priya and students shared their thoughts through touching speeches. They reminisced about classroom memories, shared laughter, lessons learned beyond textbooks, and the strong bonds formed over the years. A captivating video presentation became the emotional highlight of the evening. It beautifully portrayed cherished moments — achievements, celebrations, friendships, and milestones.

During the felicitation segment, the outgoing students were appreciated for their dedication and accomplishments. The Vice Principal Dr.S.Sakthivel encouraged the students to face challenges with confidence and to uphold the values learned within the school campus.

The Principal, Dr.R.Uma Maheswari, in her address, advised the students to dream big, stay grounded, and never forget the roots that nurtured them. She reminded them that true success lies not only in achievements but in becoming responsible and compassionate human beings.

In his Presidential Address, Dr. Kavidasan emphasized the importance of the 5 Cs — Character, Courage, Commitment, Competency, and Creativity. He inspired the students by stating that to become truly successful in life, one must cultivate these five qualities. Character builds integrity, Courage helps overcome obstacles, Commitment ensures perseverance, Competency brings excellence, and Creativity opens doors to innovation. His powerful message deeply resonated with the gathering. Finally, class XI students presented mementos to their seniors as token of love.

The programme concluded with a heartfelt Vote of Thanks by R.Niha of class XII and the closing slogan, leaving behind misty eyes and hopeful smiles. The farewell was not merely a goodbye, but a celebration of growth, friendship, and transformation.

As the Grade XII students' step into a new phase of life, the school wishes them boundless success, strength to overcome challenges, and the wisdom to carry forward the values instilled in them.












# Satchidananda bids Farewell to outgoing class XII





## மகாபாரதம் தொடர் சொற்பொழிவு - நிறைவு விழா




மகாபாரதம் தொடர் சொற்பொழிவு 20ஆம் நிகழ்வு மற்றும் நிறைவு விழா, 31-02-2026 புதன்கிழமையன்று நடைபெற்றது. கோயம்புத்தூர் பயனீர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் க. முருகேசன் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

குருட்சேத்திரப் போர் முடிவும் தருமன் முடிசூட்டலும் பற்றி 20-ஆம் சொற்பொழிவில் முனைவர் க. முருகேசன் விளக்கியுரைத்தார். நிறைவு நாள் சொற்பொழிவிற்குப் பள்ளிச் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் தலைமை தாங்கினார். அவர் தனது உரையில், சொற்பொழிவாற்றிய முனைவர் க.முருகேசன் அவர்களையும், தொடர்ந்து சொற்பொழிவினைக் கேட்டு மகாபாரதம் கூறும் அறக்கருத்துகளை அறிந்து மகிழ்ந்த மாணவ மாணவியரையும் பாராட்டினார். நிகழ்ச்சியில் பள்ளி முதலர்வர் டாக்டர் இரா.உமாமகேஸ்வரி, துணை முதல்வர் முனைவர்.சு. சக்திவேல் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டர். தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி ஏற்பாடுகளைத் தமிழாசிரியர் முனைவர்.ம.சிவக்குமார் செய்திருந்தார்.

## சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி சார்பில் ‘சச்சிதானந்தர் இதிகாச மாமணி’ விருது

நம் பள்ளியில், 13-02-2026 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் பயனீர் கல்லூரியின் முதல்வரும் கோவை கம்பன் கழகத்தின் செயலாளருமான முனைவர் க. முருகேசன் அவர்களுக்குப் பள்ளி சார்பாக ‘சச்சிதானந்தர் இதிகாச மாமணி’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.




பள்ளியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாணவ மாணவியருக்கு கம்பராமாயணம் மற்றும் மகாபாரதம் இதிகாசங்களின் கதைகளையும் அவற்றில் சொல்லப்பட்டுள்ள அறங்களையும் தொடர்ந்து சொற்பொழிவாக முனைவர் க. முருகேசன் வழங்கி வந்தார். அவரது அறப்பணியைப் பாராட்டி, பள்ளி சார்பில் ‘சச்சிதானந்தர் இதிகாச மாமணி’ விருதினை பேரூராதீனம், இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் வழங்கினார். பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன் முன்னிலை வகித்தார். விருதைப் பெற்றுக்கொண்ட பயனீர் கல்லூரியின் முதல்வர் முனைவர் க. முருகேசன் ஏற்புரை வழங்கினார்.




நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் டாக்டர் இரா. உமா மகேஸ்வரி, துணை முதல்வர் முனைவர் சு.சக்திவேல், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவியர் மற்றும் அவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினைப் பள்ளியின் ‘சச்சிதானந்தர் வழிபாட்டு மன்றம்’ பொறுப்பாசிரியர் முனைவர் ம.சிவக்குமார் செய்திருந்தார்.

# நன்றி நவிலல் விழா

**February 13, 2026**

நம் பள்ளியில், **13-02-2026** வெள்ளிக்கிழமையன்று, பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியர் தங்கள் பெற்றோருக்கு நன்றி நவிலல் நிகழ்வினை நடத்தினர்.



பேரூராதீனம், இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அருளாசியுடன் நன்றி நவிலல் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாணவ மாணவியர் மற்றும் அவர்தம் பெற்றோர் தமிழ்ப் பாரம்பரிய உடையணிந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். பெற்றோர்களின் கரங்களைப் பிடித்தவாறு மாணவர்கள் வழிபாட்டு நிகழிடமான சச்சிதானந்தர் பொன்விழாக் கலையரங்கிற்கு வந்தனர்.

திருவிளக்கு வழிபாடும், சச்சிதானந்த சுவாமிகளை வணங்கிக் குருவழிபாடும் நடத்தப்பெற்றது. நன்றி நவிலல் நிகழ்வு குறித்து பன்னிரண்டாம் வகுப்பைச் சேர்ந்த மாணவியர் தலைவி மாணவி பா. தியா பிரீத்தி, "நான் ஒன்பது வருடங்களாக இந்தப் பள்ளியில் பயின்று வருகிறேன். என் மூத்த சகோதரிகள் இரண்டு பேரும் நம் பள்ளியில்தான் பயின்றார்கள். என் பெற்றோருக்கு நம் பள்ளியைப் பிடித்திருப்பதற்குக் காரணம் இங்குக் கல்வி மற்றும் விளையாட்டு போன்ற அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நம் பெற்றோர்களை வணங்கும்படியாக இந்த நன்றி நவிலல் விழாவை நடத்தி சிறப்பு செய்ததற்கு அனைவருக்கும் நன்றி." என்றார்.



மாணவர் நீ.நா.யஸ்வந்த், “தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. என்னைச் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியில் பயில வாய்ப்பு அளித்த பள்ளி நிர்வாகத்திற்கும் என் பெற்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது வாழ்க்கையின் முதல் ஆசான் அம்மாவும் அப்பாவும் ஆவார்கள். நமது வெற்றியே பெற்றோரின் மகிழ்ச்சியாகும். விண்ணில் இருப்பது சொர்க்கம் அல்ல, அம்மா அப்பா பாதங்களே நமக்குச் சொர்க்கம். அத்தகைய கண்கண்ட தெய்வங்களை வழிபட்டு, வாழ்த்துகளைப் பெற்று வாழ்வில் மென்மேலும் வளர்வோம். நம் பள்ளிச் செயலர், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் ஐயா "முதியோர் இல்லத்திற்கு உணவு கொடுங்கள், உடுத்த உடை கொடுங்கள், ஆனால் ஒருபோதும் உங்கள் பெற்றோரைக் கொடுத்துவிடாதீர்கள்" என்று சொல்வதை நாங்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்போம்.” என்றார்.



பள்ளி மாணவி பா.தியா பிரீத்தியின் தந்தை திரு.தேர்போகி.வி.பாண்டி பேசும்பொழுது, “கடந்த 13 ஆண்டுகளாக எனது குழந்தைகள் இந்தப் பள்ளியில் படித்து வருவதால், ஒரு பெற்றோராக நான் இங்கு

நிற்கிறேன். என்னுடைய இரண்டு மகள்கள் ஏற்கனவே இங்குப் படித்து முடித்துவிட்டார்கள்.



சுவாமிஜியின் அருளால் நிர்வாகத்தினர் இப்பள்ளியை மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்கள். எனக்காகவும், மற்ற அனைத்து பெற்றோர்கள் சார்பாகவும் பள்ளி நிர்வாகத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்"என்றார்.

பன்னிரண்டாம் வகுப்பு மாணவர் ச.அஷ்வந்தின் தந்தை திரு. என். சதீஷ் குமார் பேசும்பொழுது, "முதலாவதாக, இந்தக் கல்வி நிறுவனத்தை நிறுவிய சச்சிதானந்த சுவாமிகளுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இங்குள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள். எங்கள் மகன் ச. அஸ்வந்த், 8-ம் வகுப்பில் இப்பள்ளியில் சேர்ந்தான். ஆண்டுகள் செல்லச் செல்ல, அவன் மீது எங்களுக்கு இருந்த நம்பிக்கை அதிகரித்தது. எளிமையாகச் சொன்னால், இங்கு வருவதற்கு முன்பு என் மகன் ஒரு செதுக்கப்படாத கல்லாக இருந்தான். இந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் அவனை ஒரு அழகான சிலையாகச் செதுக்கியுள்ளனர். இந்த மாற்றத்திற்காக நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். வெறும் கல்வி அறிவு மற்றும் மதிப்பெண்களைத் தாண்டி அவனுடைய பண்பு மற்றும் திறமைகளில் ஒரு பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளேன். பெற்றோர்களாகிய எங்களால் எதைச் சாதிக்க முடியவில்லையோ, அதை இப்பள்ளி ஆசிரியர்கள் வெற்றிகரமாகச் செய்துள்ளனர். பள்ளி நிர்வாகத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்"என்றார்.



மாணவி கே. தர்ஷனாவின் தாயார் திருமதி மோகனாம்பாள் பேசுகையில், "அனைவருக்கும் வணக்கம். என் மகள் தர்ஷனா, 12-வது வகுப்பு படிக்கிறாள். பள்ளிப் பருவத்திலே வாழ்க்கைக்குத் இன்றியமையாத ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றைக் கற்றுத் தருகின்ற இப்பள்ளிக்கு நன்றி" என்றார்.

மாணவர் பி. பிரித்விக்கின் தந்தை திரு. பிரகாஷ் பேசும்பொழுது, "வாழ்க்கைக்குத் தேவையான மனித ஒழுக்கத்தை முதலில் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்துவிட்டு, பாடத்தைச் சொல்லிக் கொடுத்தால் பாடம் நன்றாக குழந்தைகளுக்குப் பதியும் என்கிற நோக்கில் இப்பள்ளி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதற்கு வாழ்த்துகள். எனக்கு, என் மகன் ஒரு மிகப்பெரிய இன்ஜினியராக, மிகப்பெரிய டாக்டராக வரவேண்டும் என்ற ஆசை இருந்தாலும் கூட, ஒரு நல்ல மனிதராக வளர வேண்டும் என்கின்ற ஒரு நோக்கம் இருந்தது. அந்த நோக்கம் இன்று மனதார நிறைவேறி இருப்பதற்குக் காரணமான இந்தப் பள்ளி நிர்வாகத்திற்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



'குடும்பம்' என்ற அமைப்பு இல்லையென்றால் இந்த உலகம் எப்பொழுதோ அழிந்து போயிருக்கும். இந்த உலகம் முழுவதும் தற்காலத்தில் மிகப்பெரிய பொருளாதாரச் சீரழிவு இருந்தாலும் கூட, நமது பாரத தேசம் இன்றைக்கு ஒரு நல்ல உத்வேகத்தோடு சீரிய முன்னேற்றத்தைக் கண்டு கொண்டிருக்கிறது என்றால் அதற்கு முதற்காரணம் நமது குடும்ப அமைப்பு. இந்தக் குடும்பப் பாங்கான ஒரு கலாச்சாரத்தை நோக்கிய ஒரு

வாழ்வியல் முறை மட்டும் தான் இந்த உலகத்தில் வேறு எங்கும் கிடைக்காமல் இந்த பாரத தேசத்திற்கு மட்டுமே உரியதாக இருந்து நம்மையெல்லாம் காத்துக் கொண்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட அந்தக் குடும்பப் பாங்கை நமது குழந்தைகளின் மனதில் விதைத்து, அவர்களும் பிற்காலத்தில் ஒரு மிகச்சிறந்த குடிமக்களாக, மிகப்பெரிய பாரத தேசத்தை உருவாக்கக்கூடிய சிற்பிகளாக வளர்வதற்கு உறுதுணையாக இருக்கும் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.'' என்றார்.



பள்ளிச் செயலர் 'சிந்தனைக் கவிஞர்' முனைவர் கவிதாசன் அவர்கள் தனது தலைமையுரையில், "1836-ஆம் ஆண்டு மெக்காலே பிரபு இந்தியாவிற்கு வந்தபோது, இந்தப் பாரத தேசம் முழுவதும் சுற்றிப் பார்த்தார். பிரிட்டன் நாடாளுமன்றத்தில் அவர் பேசும்போது, 'நான் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்தேன், அங்கே ஒரு பிச்சைக்காரனையோ அல்லது ஒரு திருடனையோ கூட என்னால் பார்க்க முடியவில்லை' என்று வியந்து கூறினார். அன்றைய பாரதம் அப்படி இருந்தது. இந்தத் தேசத்தை நாம் அடிமைப்படுத்த வேண்டுமானால், இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கும் குருகுலக் கல்வி முறையையும், அவர்களுடைய பண்பாட்டையும் நாம் சிதைக்க வேண்டும்' என்று அவர் கூறினார். அதன் விளைவாகவே நமக்கு ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப்பட்டது.

நமது இலக்கியங்கள் வெறும் கதைகள் அல்ல. அவை வாழ்வியல் நெறிகள். விவேக சிந்தாமணியில் உள்ள ஒரு பாடலில் 'ஆபத்து உதவாப் பிள்ளை, அரும்பசி உதவா அன்னம்' என்ற வரி ஆபத்துக் காலத்தில் உதவாத பிள்ளையும், பசியின் போது கிடைக்காத உணவும் எதற்கும் பயன்படாது என்று குறிப்பிடுகின்றது. மற்ற உயிரினங்கள் தன் குட்டிகளை வளர்ப்பது என்பது இயற்கை உணர்வு. ஆனால் ஒரு மனிதன் வளர்ந்த பிறகு தன் பெற்றோரை மதிப்பதும், அவர்களை வணங்குவதும் தான் மேலான பண்பு. பெற்றோரை வணங்குவது மாணவர்களாகிகய உங்களது சுயமரியாதையைக் குறைக்காது, அது உங்களைப் பண்படுத்தும். இப்பள்ளியில் பயில்கின்ற மாணவர்கள் ஒருவருக்கொருவர் 'அண்ணா, அக்கா' என்று எப்பொழுதும் உறவுமுறை சொல்லி அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றதர். இதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தப் பண்பாடு தான் உங்களைச் சிறந்த மனிதர்களாக மாற்றும்'' என்று பேசினார்.



தொடர்ந்து அருளாசி வழங்கிய பேரூராதீனம், இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும் எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்றும் போற்றுவது நம் பண்பாடு. உண்மையான அறிவு என்பது எது? நம் முன்னோர்கள் அறிவை நான்கு நிலைகளாகப் பிரித்தார்கள். பள்ளிக்கூடத்தில் நாம் படிக்கும் பாடங்கள் வெறும் கால் பங்கு அறிவு தான். ஆய்வகங்களிலும் கணினிகளிலும் நாம் கற்கும் செயல்முறைகள் மற்றொரு கால் பங்கு. மீதமுள்ள அரை பங்கு அறிவு என்பது நம் அற நூல்கள் காட்டும் ஒழுக்க






நெறிகளில் தான் ஒளிந்து கிடக்கின்றது. கிணற்றை முக்கால்வாசி தாண்டினால் போதாது, முழுமையாகத் தாண்டினால் தான் வெற்றி. அதுபோலவே, இந்த நான்கு வகை அறிவையும் பெறுபவனே முழுமையான மனிதனாகிறான். இன்று நம்மிடம் அன்பு குறைந்து வருவதைக் காண்கிறோம். சச்சிதானந்த சுவாமிகள் ஒரு அருமையான வாசகத்தைச் சொன்னார்கள்: **"Live and learn to love and serve"** - அதாவது நேசிக்கக் கற்றுக்கொள், பணி செய்யக் கற்றுக்கொள். நேசிப்பது என்றால் எங்கோ இருக்கும் யாரையோ அல்ல; முதலில் உங்களை நீங்களே நேசியுங்கள். "நான் நலமாக இருக்கிறேன், என்னால் முடியும்" என்று உங்களை நீங்கள் நேசிக்கும்போது உங்கள் ஆளுமை வளரும். பின்னர் அந்த அன்பை உங்கள் குடும்பத்திற்கும், சுற்றத்திற்கும், இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் பகிருங்கள். ஒழுக்கம் என்பது உயிரை விட மேலானது. மற்றவர்கள் நமக்குச் செய்யும் உதவிக்காக நாம் காட்டும் 'நன்றி நவிலல்' தான் வழிபாடு. அன்பு, கொல்லாமை, ஐந்தடக்கம் (புலனடக்கம்), பொறை (பொறுமை), அறிவு, அருள், வாய்மை, தவம் ஆகிய எட்டு மலர்களைக் கொண்டு இறைவனையும் நம் பெற்றோர்களையும் நாம் வணங்க வேண்டும். ஓர் ஆலமரம் பலவீனமானாலும் அதன் விழுதுகள் தாங்கிப் பிடிப்பதைப் போல, நம் பண்பாடு சிதையும்போது நம்முடைய குழந்தைகள் தான் அந்த விழுதுகளாக நின்று பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டும். மாணவர்களே! உங்களுக்கென்று ஒரு பிறந்தநாள் வரும்போது அல்லது ஒரு விசேஷ நாள் வரும்போது, உங்கள் பெற்றோரின் பாதங்களைத் தொட்டு வணங்கி ஆசி பெறுவதை பழக்கமாக்கிக்கொள்ளுங்கள். இது வெறும் சடங்கல்ல; உங்களை ஈன்றெடுத்தவர்களுக்கு நீங்கள் காட்டும் உயரிய அன்பு.'' என்றார். தொடர்ந்து, வழிபாட்டில் கலந்து கொண்டவர்கள் மற்றும் எல்லோரும் எல்லா வளங்களையும் நலங்களையும் பெற்று வாழவும், பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியர் எழுதவிருக்கின்ற பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறவும் 'வேண்டுதல் விண்ணப்பம்' செய்தார்.

பேரூராதீனம், இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரையும், சான்றோர் பெருமக்களையும், வழிபாட்டில் கலந்து கொண்ட பெற்றோர்கள் மற்றும்




ஆசிரியர்களையும் மாணவ மாணவியர் வணங்கி ஆசி பெற்றனர். நிறைவாகத் தவத்திரு சச்சிதானந்த சுவாமிகளுக்கு மகாதீபாராதனை நடைபெற்றது.

முன்னதாக வழிபாட்டிற்கு வந்திருந்தோரைப் பள்ளி முதல்வர் டாக்டர் உமாமகேஸ்வரி வரவேற்றார். பள்ளித் துணை முதல்வர் முனைவர் சு.சக்திவேல் மற்றும் ஆசிரியர்கள், பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியரின் உறவினர்கள் கலந்துகொண்டனர். 'ஏழிசை வல்லபி' சொர்ணா சோமசுந்தரம் குழுவினர் திருமுறை இசைத்தார். பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் ஜெயப்பிரகாசம் நன்றி நவிலல் நிகழ்வினை நடத்தினார். பள்ளித் தமிழாசிரியர் முனைவர் ம.சிவக்குமார், ஆசிரியர்கள் மற்றும் பராமரிப்புத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டினைச் செய்திருந்தனர்.





## Fabric painting workshop

**February 1 ,2026**

On Sunday, February 1, 2026, our school organized a specialized Fabric Painting Workshop aimed at enhancing the artistic skills and creative expression of our students. The session was conducted by the esteemed artist, Mr. Koteeswaran, and saw active participation from a select group of 28 students.

The workshop was designed to be a comprehensive, hands-on experience, focusing on both traditional and contemporary fabric art. Key areas of learning included:

Design and Pattern Exploration: Students practiced a variety of intricate patterns, ranging from natural elements like birds, butterflies, and flowers to complex traditional deity designs.

Mr. Koteeswaran provided expert guidance on technical brush strokes and the specific nuances of applying paint to different fabric textures.

A crucial segment of the workshop was dedicated to teaching students how to handle and prepare fabric carefully to ensure the longevity and quality of their artwork.

The atmosphere throughout the session was highly interactive and vibrant. The participating students expressed immense satisfaction with the workshop, noting that it was both informative and deeply inspiring.

The event successfully fostered a spirit of creativity, providing students with practical skills that they can continue to develop in their artistic journeys.

## “வானம் தொடலாம் வாங்க” - நூல் வழங்கும் நிகழ்வு

நம் பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களின் ‘வானம் தொடலாம் வாங்க’ நூலினைப் பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவ மாணவியருக்கு வழங்கும் நிகழ்வு பிப்ரவரி மாதம் **10** ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை தாமரைக் கூடத்தில் நடைபெற்றது. பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் தனது உரையில், “வானம் தொடலாம் வாங்க நூலில் பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில்கள் இடம்பெற்றுள்ளன. மாணவர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களுக்கு விளக்கங்களாக அவை அமையும். எனவே, இந்நூலினை மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும்.” என்றார்.



# Fabric painting workshop















# Accolades

## AIMER Mathematics Conference

We are happy to share that our students participated in the 9th AIMER (Association for International Mathematics Education and Research) Mathematics Conference held from January 3rd to 6th, 2026, in Thiruchirapalli and presented their papers with great confidence and clarity.

V.Parithi and Yuvanth (Grade XI) presented on "The Fascinating Semi-Harmonic Mean," and Y.Sakthi Balan (Grade VIII) presented on "A New Approach to Finding Cube Numbers." Their presentations were highly appreciated by the delegates. V. Parithi also received a memento in the Lucky Dip event.





# Accolades

## 'Nation Builder Award - 2026'

We are pleased to share that two of our teachers Edward Jerry Louis, teacher of Computer Science and K.Sasireka, teacher of Mathematics received 'Nation Builder Award - 2026', organised by United Educational Institutions and Rotary Coimbatore Elite on February 1, 2026 at United Educational Institutions, Periyanayakkanpalayam, Coimbatore.



# Art Gallery





VIVEKA.K
C-2827, VIII-B






NISHAA.B.U
C-2802,VI-A





SRIHITH.R
C-2693,VIII-D





KAYANTHEKHA.G.V
C-2347, VII-A

# Art Gallery





**THARUN.P.K**
**C-2764, VIII-A**





**AMRIT.A**
**C-2513, VII-B**






**RATHEE MALAR.N.G**
**C-2631, VII-B**





**SUDHARSAN.J.R**
**C-2558, VI-B**

# Art Gallery





**MUKILAN.S**
**C-2515, VIII-D**





**OWSHITHAN.S.K**
**C-2508, V-B**





**MAHATHI RITHIKA.G.K**
**C-2638, VII-B**





**CIBI KIRUTHIK.C**
**C-2838, V-B**

# SATCHIDANANDA JOTHI NIKETHAN

## INTERNATIONAL SCHOOL



Affiliated to CBSE New Delhi. ( Co-ed Residential School )
Kallar (PO), Mettupalayam, Coimbatore (Dt) - 641305



**ADMISSION OPEN** **CLASS XI 2026-2027** **LIMITED SEATS ONLY**

| Website | Phone | Email |
|---|---|---|
| www.sjnschool.com | +91 95004 22110, +91 98946 83056 | admission@sjnschool.com<br>principal@sjnschool.com |

- *Serene, Safe and Secure Campus*
- *All teachers and service staff stay in campus*
- *Healthy Vegetarian Food*
- *24 x 7 Personal Care*
- *Focus on Holistic Development such as Physical, Intellectual, Emotional, Spiritual and Social*
- *State of the Art sports facilities such as Hockey, Basketball, Tennis, Badminton, Cricket, Table tennis, NCC, Scouts and Guides, Rifle shooting and Swimming*
- *Club activities such as Model United Nations,Dico Masters, Premchand Hindi Basha Sangh, Aero Modeling, Robotics, Philately, Eco Club and Art Club*
- *Highly Resourceful and Dedicated Teachers to train students on 21st Century Skills*


| | |
|---|---|
| SCIENCE STREAM | 1. Physics 2. Chemistry 3. (E3) 4. (E4) ( NEET / JEE Coaching is Mandatory ) |
| MANAGEMENT STREAM | 1. Accountancy 2. Business Studies, 3. (E3) 4. (E4) |
| HUMANITIES STREAM | 1. Geography 2. Political Science, 3.(E3) 4. (E4) |

| | |
|---|---|
| ELECTIVE SUBJECT 3 (E3) | Biology / Economics / Computer Science / Entrepreneurship |
| ELECTIVE SUBJECT 4 (E4) | Mathematics / Psychology / Computer Science |

Dr Kavidasan
Secretary

**WE EDUCATE THE MIND ; ILLUMINATE THE SOUL**

Shri K. Ramasamy
Managing Trustee




## REGISTER NOW FOR CLASSES IV TO IX

**Website**
www.sjnschool.com

**Phone**
+91 95004 22110, +91 98946 83056

**Email**
admission@sjnschool.com
principal@sjnschool.com

- *Serene, Safe and Secure Campus*
- *All teachers and service staff stay in campus*
- *Healthy Vegetarian Food*
- *24 x 7 Personal Care*
- *Focus on Holistic Development such as Physical, Intellectual, Emotional, Spiritual and Social*
- *State of the Art sports facilities such as Hockey, Basketball, Tennis, Badminton, Cricket, Table tennis, NCC, Scouts and Guides, Rifle shooting and Swimming*
- *Club activities such as Model United Nations,Dico Masters, Premchand Hindi Basha Sangh, Aero Modeling, Robotics, Philately, Eco Club and Art Club*
- *Highly Resourceful and Dedicated Teachers to train students on 21st Century Skills*

## WANTED TRAINEE TEACHERS FOR ALL SUBJECTS

**Qualification : Post Graduation ( Freshers only)**

**Walk in interview at 10.00 am on 22-02-2026 in School premises.**

Dr Kavidasan
Secretary


WE EDUCATE THE MIND ; ILLUMINATE THE SOUL

Shri K. Ramasamy
Managing Trustee

சிகரம் தொடு

# பிடிவாதம் எனும் மனோபலம்!

– முனைவர் கவிதாசன்




**'பிடிவாதம்' எனும் மனவலிமையை, ஆக்க செயலுக்காக திருப்பி விட்டால், நிலவில் இருந்தும் கனிகள் பறிக்கலாம்; உலகத்தின் தலைவிதியை மாற்றிக் காட்டலாம்! இதைத் தான், 'வைராக்கியம்' என்று சொல்கின்றனர்.**

பிடிவாத குணம் என்பது, ஒரு வலிமையான மனோபலம்! தன் பிடிவாத குணத்தை வைத்துக் கொண்டு தான், பலமுறை தோற்ற பின்பும், வெற்றியை விரட்டி பிடித்தார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன். 'எத்தனை துன்பங்கள் அடுக்கடுக்காக வந்தாலும், அகிம்சையை ஒருபோதும் கைவிட மாட்டேன்' என்ற, மோகன்தாஸின் பிடிவாத குணம் தான், அவரை மகாத்மா காந்தி ஆக்கியது!

ஆராய்ச்சி கூடமே எரிந்து சாம்பலான நிலையிலும், 'இரவைப் பகலாக்கும் முயற்சியை ஒருபோதும் கைவிட மாட்டேன்' எனும் பிடிவாத குணம் தான், தாமஸ் ஆல்வா எடிசனை, 1,600 கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரர் ஆக்கியது! 'என்றாவது ஒருநாள், எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை நான் மிதிப்பேன்' எனும் பிடிவாதம் தான், நேபாளத்தில், 'யாக்' எருமைகளை மேய்த்துக் கொண்டிருந்த டென்சிங்கை, உலக வரலாற்றில் இடம்பெற வைத்தது!

இப்படி, தங்கள் லட்சியத்தின் மீதிருந்த பிடிவாத குணத்தால், சாதாரண மனிதர்கள் பலர், சாதனைச் சிகரத்தில் வெற்றிக் கொடி நாட்டியிருக்கின்றனர். இதன்மூலம், 'பிடிவாத குணம் ஓர் ஆற்றல் மிக்க அற்புத சக்தி' என்பதை நாம் உணரலாம்! அதே வேளையில், சுயலாபத்திற்காகவும், வீண் கவுரவத்திற்காகவும், தவறை உணர்ந்தும் அதை திருத்திக் கொள்ளாமல் வீண் பிடிவாதம் பிடித்தால், 'அழிவு நிச்சயம்' என்பதையும் நாம் உணர வேண்டும்.

பொதுவாக, வெற்றி பெற விரும்புபவன், வெற்றிக்கு அடிப்படையான எல்லையில்லா முயற்சி, ஈடு இணையில்லா உழைப்பு, தளராத தன்னம்பிக்கை இவற்றோடு, அப்பழுக்கற்ற ஒழுக்கத்தையும் பிடிவாதமாக ஏற்க வேண்டும். ஏனென்றால், திறமையை வைத்துக் கொண்டு ஒருவனால், சிகரத்தை அடைய முடிந்தாலும், சுய ஒழுக்கம் இல்லாது போனால் ஒரு நொடி கூட அங்கு நிலைத்து நிற்க முடியாது!

ஆகவே, 'எந்தச் சூழ்நிலையிலும் ஒழுக்கநெறிகளில் இருந்து பிறழ மாட்டேன்' எனும் பிடிவாத குணத்தை நெஞ்சில் நிறுத்துவோம்; வெற்றிச் சிகரங்களை நம் சிம்மாசனமாக்குவோம்!

## குறளோசை

அதிகாரம் 62 ஆள்வினையுடைமை குறள்: 616

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**



**விளக்கம் :** முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

**Perseverance**
Perseverance leads to prosperity
Effortlessness results in poverty.

**Explanation:** Strenuous effort brings wealth and laziness brings only poverty.



**Published by: Dr. Kavidasan, Secretary**
Editors: Dr. R. Uma Maheswari, Principal,
Mr. N.K. Sekaran, Dept.of English
Students: Rishaan D. Narasimhan & Dhiya Preethi P.
Designed by: Dr. V.K. Karthikeyan, Teacher of Tamil